தொகுதி 7] [பகுதி 5

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபாநு ஸூ ஆவணி மீ
AUGUST 1942

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

**520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.**

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தாய் மொழி கற்பித்தல் ... .... .... — M. சுப்பிரமணியம் | 115 |
| 2. | ஆரம்ப பாடசாலைகளில் போதனு உபகரணங்களின் அவசியமும் அவற்றின் உபயோகமும் .... .... — K. ராமச்சந்திர ராவ் | 121 |
| 3. | அனுபவக் கனிகள் .... .... .... — P. N. கல்யாணசுந்தரம் | 124 |
| 4. | கல்வியும் கைத்தொழிலும் .... .... .... — R. M. Savur | 128 |
| 5. | செய்தித் திரட்டு .... .... .... | 129 |
| 6. | பத்திராதிபர் குறிப்புகள் ... .. .... | 135 |


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1942 ஆகஸ்டு மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள்:—

சென்னை — M. 35.
செங்கல்பட்டு — CH. 15, 32 b. 36.
வட ஆற்காடு — N. A. 29, 38. 52 60
தென்னாற்காடு — S. A. 32.
தஞ்சாவூர் — Tan. 32. 37, 57.
திருச்சி — Tri. 5, 8, 40.
ராமனாதபுரம் — Rd. 70.
மதுரை — Md. 33, 34, 35, 38, 132.
திருநெல்வேலி — Tin. 52, 53, 80, 82.
சேலம் — S. 11, 18, 26, 29, 37. 38. 39, 41. 67. 68.
கோயமுத்தூர் — Co. 27, 47.

குறிப்பு—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

# பாலர் கல்வி

தொகுதி 7 | 1942 ௵ ஆகஸ்டு ௴ சித்ரபாநு ௵ ஆவணி ௴ | பகுதி 5


## தாய்மொழி கற்பித்தல்


M. Subramaniam, *L. M. C. High School, Shiyali.*


### XIII. செய்யுள் கற்பிக்கும் முறைகள். (பழயதும்—புதியதும்)

பழய கல்வி முறை.

நம் நாட்டில் தொன்று தொட்டு வந்த கல்விமுறை அமைப்புக்கள் எல்லாம் ஆசிரியரையே அடிப்படையாகக் கோண்டு இருந்தன. ஆசிரியருடைய பெருமுயற்சி, தேர்ச்சி, மனவியல்பு, தனிவிருப்பம், ஊக்கம் ஆகிய இவை மாணவர்களுடைய ஆர்வத்தை விருத்தியாக்கி அவர்களுடைய உழைப்பையும், தனிச் சக்தியையும் வளர்க்கக்காரணமாக இருந்தன. கல்வி அறிவும், சிரத்தையும் நிறைந்த ஆசிரியரை சேரம் பேறி மாணவன் அணுகுவது கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. மேலும் இவரை "ஐங்குரவரில்" ஒருவராகச் சமூகம் மதித்து, பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளைக் கல்வித் தேர்ச்சியின் பொருட்டு இவரிடம் அனுப்பி வந்தார்கள். பாடம் கேட்கும் மாணவர்கள் ஆசிரியரது குணத்தில் பழகியும், அவருடைய நோக்கம், கருத்து முதலியவற்றை அறிந்தும், அவர் சொன்னபோது வந்தும், அவருடைய மனத்துக்கு இசைந்தாற்போல் நடந்து கொண்டும், பொதுவாகத் தங்களை அவருடைய சகல போக்குக்களுக்கும் கீழ்ப்படுத்திக்கொண்டும் இருந்தார்கள் அன்றியும் இவர்கள், தங்கள் ஆசான் சொல் கேட்டு அதன்படியே நடந்து கொண்டமையால் தங்களுடைய சொந்த அபிப்பிராயத்தையும் கருத்துக்களையும் அவர் முன்னிலையில் வெளி இடாமலும், அவற்றிற்கு யாதொரு சிறப்பும் தராமலும் இருந்தார்கள். தவிர பண்டைக் காலத்துக் கல்விப் பயிற்சிப் பொதுவாக மொழிபயிற்சி நோக்கத்தைக் கோண்டிருந்ததோடு

ஆசிரியரும் மாணவரும் வாய் மூலமாகச் சொல்லிக் கேட்கும் தன்மை யாகவே இருந்தது. கணிதம் சோதிடம் மருத்துவம் முதலிய சாஸ்திரப் பயிற்சி உலக வாழ்விற்கு உபயோகமாக இருந்ததோடுகூட மொழி பயிற்சியையே அடிப்படையாகக் கொண்டு இருந்தது. வசனம், கட்டுரை, கதை, சரித்திரம், பூகோளம் முதலியன அதிகமாக இருக்கவில்லை. செய்யுள் இயற்றும் திறமை அக்காலத்தில் பெருமதிப்பு பெற்றிருந்த தோடு, அது உண்மையான கல்வித் தேர்ச்சி எனவும் கருதப்பட்டது. இனிச் செய்யுளை ஆசிரியர் எவ்வாறு அக்காலத்து மாணவர்களுக்குப் போதித்து வந்தனர் என்பதைப் பார்ப்போம்.

### செய்யுள் எவ்வாறு கற்பிக்கப்பட்டது.

தற்போதுள்ள பள்ளிக்கூட பாடத்திட்டங்களில் கண்டிருக்கும் சயன்ஸ் சாஸ்திரம், சித்திரம், விளையாட்டு, சரித்திரம், கைவேலை, பூகோ ளம் முதலியனவெல்லாம் பண்டைக் காலத்துப் பள்ளிக்கூடங்களில் அதிகமாகக் கற்பிக்கப்பட்டு வரவில்லை. இதற்குப் பதிலாக அக்காலத்து வாழ்க்கைக்கு வேண்டியவற்றைக் கொஞ்சமாகச் சொல்லி கொடுத்து, செய்யுட் பாடத்தைச் சிறப்பாக நடத்தி வந்தனர். செய்யுள் நடைக் குத் தனிப்பட்ட சொற்கள் வழங்கி வந்தமையால், அவற்றை மாணவர் கள் அறிந்து கொள்ள நிகண்டு முதலியவற்றை மனப்பாடம் செய்ய வேண்டியதுடன், அணி இலக்கணத்தையும் பாடங் கேட்டு, சொல், பொருள் முதலிய அலங்காரங்கள் எவ்வாறு செய்யுளில் அமைக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டியதாக இருந்தது. மேலும் செவிப்புலனையே செய்யுள் பாடத்திற்கு அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர், தம் மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தனர். முதன் முதல் ஆசிரியர் ஒரு செய்யுளில் இருக்கும் எழுத்துக்களைப் பிரிக்காமலே இசையோடு திருத்தமாக ஒருதரம் சொல்லுவார். இதை மாணவர்கள் நன்றாகக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். ஆசிரியர் மறுமுறை சொல்லும்போது, உச்சரிப்பு, சந்தம், எடுத்தல் படுத்தல் குறுக்கல், நீட்டல் முதலிய முறைப்படி சொல்லுதல், இசைப் பொருத்தம், நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்திக் காட்டல், ஆகிய இவற்றை இலக்காகக் கொள்வார். மாணவர்களும் இப்படியே சொல்லிக் காட்டவேண்டும். அல்லது தங்கள் சுவடிகளிலோ, புத்தகங்களிலோ எழுதப்பட்டிருக்கும் செய்யுட்களை ஆசிரியர் சொன்ன மாதிரி படித்துக்காட்ட வேண்டும். பிறகு ஆசிரியர் சொற்களைப் பிரித்துப் பொருள் விளங்கும்படி கூறுவார். அல்லது செய்யுளில் இருக்கும் சொற்களின் நிலையை பொருளுக்குத் தக்கவாறு "பொருள் கோள்" படி சொல்லிக் காட்டுவார். மாணவர் களும் இப்படியே செய்ய வேண்டும். பின்பு ஆசிரியர் எதுகை, மோனை, முதலியவற்றைக் குறிப்பாக உணர்த்தி, மாணவர்களுக்கு உணர்ச்சியை யும், இசை இன்பத்தையும் ஊட்டுவார். எழுத்து, சொல் முதலியவற்

றில் மாணவன் பிழை செய்தால், அது திருந்தும் வரையில் அதை அவன் பன்முறை உச்சரித்தும் சரிவரச் சொல்லிக்கொண்டும், பற்பல சொற்களோடு சேர்த்துச் சொல்லியும் இசை பொருத்தத்தைக் கவனித்தும் பழகவேண்டும். பிறகு செய்யுள் இலக்கணத்தை ஒருவாறு விளக்கிக் காட்டுவதுபோல், உபமானம், உபமேயம் சொல் நயம், பொருள் அழகு, நடையமைப்பு, செய்யுளடியின் தன்மை பதவுரை, பொழிப்புரை கருத்துரை, விசேடவுரை ஆகிய இவற்றை விரிவாகவோ தக்கபடியோ கூறி செய்யுளை மனப்பாடம் செய்யும்படி தம் மாணுக்கர்களைக் கட்டளை இடுவார். எழுத்து வேலை, ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் மிகக் குறைவாக இருந்தது. எனவே இசையுடன் சொல்லுதல், சொற்களைப் பிரித்துப்படித்துக் காட்டல், பொருள் விளங்க நிறுத்திப் படித்தல் முதலியவற்றோடு செய்யுளை மனப்பாடம் செய்து ஒப்பித்தலும் கட்டாயமாக இருந்தது.

## இம்முறையின் சில அனுகூலப் பிரதிகூலங்கள்.

இம்முறை மொழி பயிற்சி நோக்கத்தையே கொண்டிருக்கிறது. இதன் பிரகாரம் எல்லா மாணவர்களும் செய்யுள் படிக்க முடியாது. மேலும் இம்முறையானது முதிர்ச்சி அடைந்த மாணவர்களுக்கு மாத்திரம் தக்கதாகும். ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொல்வதனுல் சில மாணவர்களுக்கு வெறுப்பு ஏற்படலாம். கீழ் வகுப்பு மாணவர்களுக்கு இவ்விதம் சொல்லிக் கொடுத்தால் செய்யுளில் உற்சாகம் உண்டாகாது. ஏனென்றால் பாலர்களுடைய மனம் இவ்விஷயங்களை ஏற்றுக் கொள்வதற்கு வேண்டிய பண்படைந்திருக்காது. தற்போது அமைக்கப்பட்டிருக்கும், பாட திட்டத்தின் பிரகாரம் குறித்த காலத்தில் ஒரு செய்யுளைப் பற்றிய எல்லா விஷயங்களையும் அநேக பாடங்களின் இடையே சொல்ல முடியாது. இந்த முறைப் பிரகாரம் மாணவன் கேள்விகளை உற்சாகத்துடன் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு இடமில்லை. பிள்ளைகளுடைய சொந்த யோசனைகளுக்கும், கற்பனு சக்திக்கு எட்டியதை வருணித்துக் கூறுவதற்கும் கொஞ்சம் வழியுமில்லை. ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு விஷயத்தில் தனிப்பட்ட ஆற்றல் வாய்ந்தவனுகவும், விருப்பம் உடையவனுகவும் இருக்கிறபடியால், ஆசிரியரை அவன் பின்பற்றி அவர் சொல்வதை அப்படியே அனுகரணம் செய்வது என்பது கொஞ்சம் கஷ்டமான விஷயம். ஆனுல் இந்த முறையில், செய்யுளின் இசை, சொல் அழகு, பொருள் நயம், அதை ஆக்கியோனுடைய மனுேசிறப்பு, அடிக்கடி படிப்பதனுல் உண்டாகும் மொழி உணர்ச்சி, முதலியன அடங்கி இருக்கின்றன.

## நூதன முறை.

நூதன முறைகள் எல்லாம் பொதுவாக மாணவர்களுடைய மனப்பண்பு, வயது, தனிவிருப்பம் முதலிய மனுேதத்துவ விஷயங்களை

அடிப்படையாகக்கொண்டு இருக்கின்றன. மாணவனுக்குப் பல பாடங்களுக்கு இடையே குறித்த நேரத்தில் அதிகமான உற்சாகமும், விருப்பமும் செய்யுள்பாடத்தில் ஏற்பட எவ்விதம் ஆசிரியர் போதிக்க வேண்டும் என்பதை இம்முறை நோக்கம் கொண்டிருக்கிறது. ஆரம்ப வகுப்புக்களில் வாய்மூலமாகச் சிற்சில அபிநயப் பாட்டுகள் உற்சாகம் அளிக்கும் வண்ணம் கற்பிக்கப்படுகின்றன. அல்லது சந்தம் நிறைந்த வரிகளைச் சொல்வது, பறவை, வீட்டு மிருகம், முதலிய சத்தங்களைப் பாட்டில் அமைத்துக்காட்டுவது, மனிதனுடைய சில செயல்களை விளக்கிக்காட்டும் சொற்களை உபயோகித்துப்பாடுவது முதலின செய்யுளுக்குப் பதிலாகக் கற்பிக்கப்படுகின்றன. அடுத்த வகுப்புக்களில், கதைப்பகுதிகள், ஔவையாரின் ஆத்திச்சூடி, முதலிய நீதிப்பகுதிகள், உலகநீதி முதலியனவற்றை, பிரசங்களோடு சேர்த்து மாணவர்கள் படிக்கின்றார்கள். ஆசிரியர்கள், பரீக்ஷைப் பலன்களை உத்தேசித்துச் சிற்சில கேள்விகளையும், பத உரை போன்றவற்றையும் உபமானம் முதலியனவற்றையும் விளக்கிக் காட்டுகிறார். நீதிச் செய்யுட்களை விளக்க ஒரு கதையும் சொல்வதுண்டு. ஒவ்வொரு செய்யுளையும் அவசியமாக மனப்பாடம் செய்யவேண்டும் என்கிற நோக்கம் இந்த முறைத்தன்மையில், அதிகமாக இல்லை.

### கவனிக்கவேண்டியது எது?

வகுப்புப் பிரகாரம் மாணவர்கள் வகுக்கப்பட்டு இருக்கிறபடியால், எல்லாப் பிள்ளைகளையும் கவனிப்பது ஆசிரியருக்குச் சற்று சிரமம். பரீக்ஷைப் பலனை உத்தேசித்துப் பிள்ளைகளுடைய மனத்தில் சிற்சில கேள்விகளுக்குப் பதில் எழுதுவதனால் கலை இன்ப உணர்ச்சி குறைகிறது. உயர்ந்த உணர்ச்சியை ஊட்டி, விசேஷக்கற்பனைப் பொருள் மூலமாக அரிய கருத்துக்களையும் விளக்கிக்காட்டி, சொல்லும், பொருளும், உணர்வும், இசையும்ஒன்றுகக்கலந்திருக்கும் பொருள் செய்யுள். இவ்விஷயத்தை ஆசிரியர் ஒருபோதும் மறக்காமல், உயர்ந்த கருத்தைக் கவி கூறிய சொல்லைக்கொண்டே மாணவர்களுக்குப் பொருளை உணர்த்திக் காட்டுவதற்குப் பதிலாகப் பதவுரை, பொழிப்புரை போன்றவற்றைக் கற்பிப்பது உயர்ந்த முறையின் தன்மைப் பிரகாரம் சரி அன்று. இது செய்யுளின் அழகைக் குறைக்கிறது. நீதி விஷயங்களை விளக்கிக் காட்ட கதை நல்லதெனினும், கதைப் போக்கில் சிறுவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தி, செய்யுளின் அழகை மறந்துவிடுவார்களாகையால், ஆசிரியர் கதைப் பொருளை வெகு ஜாக்கிரதையாகச் சொல்வதோடு செய்யுள் வரிகளையும் நினைப்பூட்டிக் கொண்டிருக்கவேண்டும். எப்படிக் கலப்பு உணவானது மிகவும் ஆரோக்கியமானதோ அப்படியே நன்மை பயக்கும் தன்மை நிறைந்த பல விஷயங்களைத் தகுந்தாற்போல் ஆசிரியர்கள் உபயோகிக்கவேண்டும். செய்யுள் போதிக்கும் ஆசிரியருக்குச் செய்யுளில்

உண்மையான பற்றுதலும், சமயோசித புத்தி, உற்று நோக்கி அறியும் திறமை, அனுதாபம் நிறைந்த உள்ளம், கலைப்பாங்கான மனம், இசை விருப்பம், ஆகிய இக்குணங்களும் இருக்கவேண்டும். இவை பிள்ளைகளுடைய கற்பனு சக்தியைத் தூண்டி நிர்மாண சக்தியை வளர்க்கும்.

## ஆசிரியர் செய்யவேண்டியது என்ன ?

பாடத்தன்மை எப்படி இருப்பினும் பலன் நன்ருக இருந்து விட்டால் விசேஷம். சில பயிற்சிகளை மாணவர்களுக்குக் கொடுத்தால் அவர்களுடைய நிர்மாண சக்தி வெளியாகும். இதற்காக (1) வசன நடையில் ஒரு பொருளைப் பற்றிச் சுருக்கமாக வருணித்து எழுதச் செய்யவேண்டும். (2) எளிய செய்யுளும் பாட்டும், எழுதுவதற்கு வேண்டிய சக்தி சில மாணவர்களிடத்தில் அமைந்திருக்கிறபடியால், இதை வெளிப்படுத்த ஆசிரியர்கள் முயலவேண்டும். இவர்களிடம் காணும் இலக்கணப் பிழை, யாப்புப் பிழை, சந்தக் குறைவு ஆகிய இவற்றை முதலில் கண்டிக்கக்கூடாது. (3) சித்திரம் வரைதல், ஒவியம் தீட்டுதல், பாட்டுப் பாடுதல் முதலியவற்றில் விருப்பங் கொண்டிருக்கும் மாணவர்களிடம் இயற்கையிலேயே, கலைத்தன்மை அமைந்திருக்குமாகையால், இவர்கள் தங்கள் அனுபவங்களை வருணித்துக் கூற அவகாசம் கொடுக்க வேண்டும். மேலும் இவர்கள் ஒரு செய்யுளைப்போல அமைத்து எழுதுவதற்குத் திறமை இருக்குமாகில் அதை உற்சாகப்படுத்த வேண்டும். (4) செய்யுள் படிக்கும்போது சில மாணவர்கள் இசை இன்பத்தை அனுபவிக்கக் கைகொட்டி தாளம் போட்டும், சைகை காட்டியும், இவை போன்ற பிறவற்றைச் செய்தும் வருவார்கள். அவர்களைத் தண்டிக்கக் கூடாது. (5) செய்யுள் கற்றதனுல் அடைந்த இன்பத்தை மாணவர்களுக்குள் ஒருவருக்கொருவர் அளவளாவி பேசிக்கொள்ள ஆசிரியர்கள் இடைநேரம் தரவேண்டும். இனி மனப்பாடத்தைப் பற்றிக் கவனிப்போம்.

## மனப்பாடத்தைப் பற்றிய அபிப்பிராயம்

மாணவர்கள் செய்யுட்களை மனப்பாடம் செய்ய வேண்டியது என்பதைப் பற்றிச் சில அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. இலக்கிய பாகத்தில் சிறந்ததும் வெகு அழகானதுமான செய்யுட்களை பொருள் தெரியாவிடினும் மாணவர்கள் தங்கள் இளமைப் பருவத்தில் கஷ்டப்பட்டு மனப்பாடம் செய்து கொண்டால் அவை, பிற்காலத்தில் உபயோகப்படும் என்றும், நல்ல மொழி பயிற்சி உண்டாகுமென்றும், சிந்தனைக்குரிய அரிய விஷயங்கள் அவற்றில் நிறைந்திருக்கின்றன என்றும், சிலர் கூறுவதுண்டு. ஆனல் உண்மை என்ன ?

ஆசிரியருடைய முயற்சி என்ன?

அழகான செய்யுளை மாணவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டுமென்று கருதும் ஆசிரியர், முதன் முதல் அதில் நிறைந்திருக்கும் அழகான விஷயங்களை இன்பமாகச் சொல்லி மாணவர்களுடைய உற்சாகத்தை எழுப்ப வேண்டும். இதற்குப் பதிலாக அவர் செய்யுளை ஒரு தரம் படித்துவிட்டு, ஒவ்வொரு வரியாக ஒவ்வொரு மாணவனையும், படிக்கச் சொல்லி, தான் கவலையற்றவர்போல் உட்கார்ந்திருந்தால், அவனிடம் காணும் சிறிதளவு விருப்பமும் அழிந்துவிடும். ஒவ்வொரு மாணவனும் எவ்விதமோ கட்டாயமாகச் சில செய்யுள் வரிகளை மனப்பாடம் செய்தே தீரவேண்டும் என்னும் எண்ணத்திற்குப் பதிலாக, அவனுடைய உள்ளம் செய்யுளின் இன்னிசையாலும், சொல்லழகாலும், பிறவற்றாலும் பெரு மகிழ்ச்சி பெற்று உயர்ந்த நிலைமையையும், கலை உணர்வையும் அடைந்தனவென்று நினைப்பானாகில், ஆசிரியருடைய முயற்சி சிறப்பாக விளங்கும். இவ்வுணர்வு பெற்ற மாணவன் கணக்கற்ற செய்யுள் வரிகளைத் தானே மனப்பாடம் செய்துகொள்ள ஆசைப்படுவான். இதற்குப் பதிலாக வேண்டா வெறுப்பாக வகுப்பு இடை நேரங்களில் ஆசிரியருடைய தண்டனைக்குப் பயந்து மனப்பாடம் செய்யப்படும் செய்யுட்கள் எல்லாம் மாணவனுக்குப் பிரயோசனம் இல்லை. உற்சாகமும்போய் விடும். இதனால் உண்டாகும் வெறுப்புணர்ச்சி மனப்பான்மை பிற பாடங்களையும் பாதிக்கும். ஆசிரியருக்கு விருப்பமான பாகத்தை மனப்பாடம் செய்வதற்குப் பதிலாக, மாணவனுடைய மனத்தை செய்யுள் தன்மைக்குத் தக்கவாறு பண்படுத்தி, அதன் மூலமாக அவனே இஷ்டப்பட்டு தெரிந்துகொண்ட செய்யுளை மனப்பாடம் செய்யத் தூண்டும் ஆசிரியர்களே சிறப்பாவார்கள். செய்யுளில் ஆசிரியருக்கு உண்மையான விருப்பம் இருக்க வேண்டும். அதை அவர் மாணவர்கள் ஆசைப்பட போதிக்கவேண்டும். வேண்டிய இடங்களில் விஸ்தரித்துச் சொல்வதோடு, சொல் நயம், பொருள் அழகு முதலியவற்றை எடுத்துக் காட்ட வேண்டும். நூதனத்தில் பிரியமும், இயல்பாக உற்சாகமும், இன்னிசை உணர்ச்சித் தன்மையும், கற்பனை சக்தியும், நிறைந்த மாணவர்களுடைய மனம், செய்யுள் பாடத்தில் கட்டாயமாக ஈடுபட அவர்களுடைய உற்சாகத்தையே ஆசிரியர் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# ஆரம்ப பாடசாலைகளில் போதனை உபகரணங்களின் அவசியமும் அவற்றின் உபயோகமும்

[*By*. K. Ramachandra Rao, *Head-master, Board Ele. School, Erukkur* (*P. O.*), (*Via*) *Shiyali, Tanjore District.*]

ஆரம்ப பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்பிற்குத் தகுந்தவாறு உபகரணங்கள் தயாரித்து, வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று கல்வி அதிகாரிகளால் அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வருகிறது. கல்வி அதிகாரிகள் பாடசாலைகளுக்குவந்து, பரிசை செய்யும்பொழுது "நீர் எவ்வளவு சார்ட்டுகள் தயார் செய்திருக்கிறீர்?" "இன்னும் என்னென்ன உபகரணங்கள் இருக்கின்றன?" என்ற கேள்விகள் பிறக்கின்றன. இக்கேள்விகளுக்கு ஆசிரியர்களாகிய நாம் அவ்வப் பாடத்திற்கென்று தயாரித்து வைத்திருக்கும் உபகரணங்களை எடுத்து அவர்களுக்கு நேரில் காட்டி பதிலளிப்பதே தக்க மறுமொழியாகும். இதுவே நமது கடமையுமாகும். எனவே ஓர் ஆசிரியர் அவ்வப் பாடத்திற் கேற்றவாறு உபகரணங்களைத் தயார் செய்து வைத்திருக்க வேண்டும் என்றும், அதுவே அவர் கற்றுக்கொண்ட போதனை முறைக்கு ஒரு அணிகலம் என்றும் கருதவேண்டி யிருக்கிறது. இதற்கிணங்க உபகரணங்களை ஓர் ஆசிரியர் தயார் செய்து வைத்திருந்தால்தான் அவரை முழு மனதுடன் உழைக்கும் உண்மையான ஆசிரியர் என்று கல்வி அதிகாரிகளும் ஏனையோரும் உயர்வாகப் புகழ முடியும். அவ்வாறு அவர் தயார் செய்யாவிடில் அவரை ஒரு போலி ஆசிரியர் என்றுதான் இகழ நேரிடும்.

ஆகவே ஆரம்பாசிரியர்களுக்கு உபகரணங்கள் அவசியம் தேவையென விளங்குகிறது. இனி இவ்வுபகரணங்கள் ஆசிரியர்களுக்கு ஏன் அவசியம் என்றும், அவைகளால் அவர்களுக்கு உண்டாகும் உபயோகம் என்ன என்பதையும் கவனிப்போம்.

**உபகரணங்களின் அவசியம்**

ஒரு பாடத்தை பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது அது அவர்களுடைய ஞாபகத்தில் வேரூன்றி இருக்கும்படிப் போதிக்கவேண்டும். அதற்கென்ன செய்ய வேண்டுமெனில் பிள்ளைகள் ஏற்கனவே கொண்டுள்ள விஷய அறிவையும், அனுபவத்தையுமொட்டி, புதிதாகச் சொல்லிக் கொடுக்கப்போகிற பாடத்தை, உற்சாகம், ஆவல், ஞாபகசக்தி, ஆராயுந்தன்மை முதலியவைகள் உண்டாகும்படித் தயாரித்து, முறைப்படி எவ்விதமாகப் போதித்தால் சிறுவர்கள் ஏற்றுக்கொள்வார்களோ

அவ்வாறு போதிக்க வேண்டும். சிறுவர்கள் ஒவ்வொருவரையும் பரி சோதனை செய்யும்படியும், பொருட்களை உற்று நோக்கி ஆராயும்படியும் செய்ய, உபகரணங்கள் அவசியமா யிருக்கின்றன. அழகான உதா ரணங்களை எடுத்து கையாளவேண்டி யிருக்கிறது. படங்கள் அல்லது உண்மைப் பொருள்களைக் காட்டிப் பாடத்தை போதிக்கவேண்டி யிருக் கிறது. இந்த சமயங்களில் ஆசிரியர்களுக்கு அநேகவிதமான உபகரணங் கள் வேண்டி யிருக்கின்றன.

## உபகரணங்களால் ஆசிரியர்கள் அடையும் பயன்

ஓர் பாடத்தை ருசிகரமாயும், வெற்றிகரமாயும் போதிக்க மாண வர்களின் கவனத்தைக் கவரச் செய்வது உபகரணங்களே. இவைதான் ஓர் ஆசிரியர் பாடத்தைச் செவ்வனே தயாரித்து வந்திருப்பதற்கு அறி குறியாயிருக்கின்றன. இவைகளின் உதவியால் ஆசிரியர்கள் பாடத்தை வெற்றிகரமாய் நடத்த முடிகிறது. பாட ஆரம்பத்திலேயே ஆசிரியர், மாணவர்கள் தன்னிடம் மரியாதையாயும், நம்பிக்கையாயும் இருக்கும் படிப் பார்த்துக் கொள்ள முடிகிறது. உபகரணங்களை உபயோகப் படுத்தி போதிப்பதால் வீண் மெனக்கடு ஏற்படாமல் பாடத்தை விளக்க மாயும், குறிப்பிட்ட நேரத்திலும் கற்பிக்க முடிகிறது.

## உபகரணங்களால் சிறுவர்கள் அடையும் பயன்

நிதர்சனமாக பொருள்களைக்கொண்டு வந்து காட்டியோ அல்லது படங்கள்—சார்ட்டு இவைகளின் மூலமாயோ சிறுவர்களுக்குப் பாடம் போதிப்பதில் சிறுவர்கள் மனம் இடைவிடாது முயற்சி செய்ய ஆரம்பிக் கிறது. இதனால் புதுப்புது விஷயங்களை ஆராயவோ அல்லது பார்த்துத் தெரிந்து கொள்ளவோ சிறுவர்களின் மனம் நாடுகிறது. இன்னும் விளக்கமான பொருள்களும் பொது முறைக் கேற்ற விஷயங்களும், சூசனையான குறிப்புகளும் அவர்களுக்கு உண்டாகின்றன. பொறுமை, ஆவல், கருத்து முதலிய குணங்களும் விருத்தியாகி, தன்னம்பிக்கையும், மனோ தைரியமும் பிள்ளைகளுக்கு உண்டாக இவ்வுபகரணங்கள் உதவு கின்றன.

## உபகரணங்களை உபயோகப் படுத்துதல்

ஓர் ஆசிரியர் தான் போதிக்கப் போகும் பாடத்திற்கான உபகர ணங்களை முன்னதாகவே தயாரித்துக் கொண்டு, முறையாக உபயோகப் படுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் பாடம் நன்றாய் தயார் செய்து வரப்பட்டிருக்கிறது என்று கருதமுடியும். இவ்வாறன்றி ஓர் ஆசிரியர் ஓர் உபகரணத்தை வகுப்பிற்கு கொண்டு வராமலோ, அல்லது அதை கொண்டு வந்து வைத்த இடம் ஞாபகமில்லாமல் இங்குமங்கும் தேடவோ நேரிட்டால் வகுப்பில் ஒழுங்கீனம் உண்டாகும். பிள்ளைகளின் நிலையான கவனமும் சிறிது கலையும். உபகரணங்களை முறையாக உபயோகிக்கவும்

தெரிந்து கொண்டு இருக்க வேண்டும். இல்லேயேல் உபகாரணங்கள் சேதமாய்ப் போவதோடல்லாமல் ஏதாவது தீங்குகள் (முக்கியமாக விஞ்ஞான சாஸ்திரத்தில்) நேரிடக் கூடும்.

உபகரணங்களேச் செய்தல்

ஆரம்ப பாடசாலேகளுக்கான உபகரணங்களே ஆரம்பாசிரியர்களே தயார் செய்து கொள்ளவேண்டியிருக்கிறது. இவ்வுபகரணங்களேத் தயார் செய்வதற்கான சிலவை மானேஜ்மெண்டார் கொடுத்து உதவுவதில்லே என்று சொல்லிவிட்டு இருந்து விடுவது அறியாமையாகும். அட்டை, வர்ணக் காகிதம், கள்ளிப்பலகைகள், கம்பிகள், மரத்துண்டுகள், வளேயல்கள் முதலியவற்ருல் சொற்பச் செலவில் உபகரணங்களேத் தயார் செய்துகொள்ளவேண்டும். "பாலர் கல்வி"யில் அவ்வப்போழுது ஸ்ரீ ஜெகன்னுதன் அவர்களும், ஸ்ரீ V. நடராஜன் D. E. O. அவர்களும், சொற்ச் செலவில் உபகரணங்களேத் தயார் செய்ய ஓர் திட்டத்தை பிரசுரித்து வருகின்றனர். ஆரம்பாசிரியர்களுக்கு அத்திட்டப்படி உபகரணங்களேத் தயார் செய்து கொள்வதில் எந்த விதமான சிரமமும் இல்லே என்பது என் துணிபு. பிள்ளேகளின் உதவியாலேயே உபகரணங்களேச் செய்யலாம். அதாவது விடுமுறை நாட்களில் சிறுவர்களே வரச் சொல்லி வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு உபகரணங்களுக்குக் குறையாமல் செய்யலாம். இவ்வுபகரணங்களேயே பாடசாலேயை அலங்காரப்படுத்த உபயோகித்துக் கொள்ளலாம். இவ்வுபகரணங்களே குழந்தைகளேக் கொண்டு செய்வதிலுைம், அவைகளுக்கான பொருள்களே குழந்தைகள் சேகரித்து வருவதிலுைம் குழந்தைகளிடம் உள்ள பல இயற்கைச் சக்திகளில் ஒன்ருகிய 'பொருள்சேகரிக்கும் ஆற்றல்' என்ற சக்தி வெளிப்பட்டு உபாத்தியாயருக்கு மேலும் மேலும் தளரா ஊக்கத்தை அளிக்கிறது.

முடிவு

ஆதலின் 'மன முண்டானல் இடம் உண்டு' என்றபடி ஆசிரியர்கள் தங்கள் பாடசாலேயில் பாடபோதனு முறைக்கு அநுகுணமான உபகரணங்களேத் தயார் செய்து வைத்திருக்க வேண்டும் என்பது அவசியத்திலும் அவசியமாகிறது.

இக்காலப் போக்குக்கு ஏற்றபடி கல்வி உலகும் குழந்தைகள் உலகமும் மாறி மாறிக்கொண்டே வருகிறது. அதற்கேற்ப உபாத்தியாயரின் மனேபாவமும், செயற்கை சக்தியும், பள்ளிக்கூட அமைப்பும் மாறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகையால் ஆசிரியர்கள் தாங்கள் வேலே செய்யும் பாடசாலேயை ஒரு இன்பமான இடமாக மாற்றியமைக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

'வாருங்கள் எங்கள் கலாநிலேயத்தை வந்து பாருங்கள்'

# அனுபவக் கனிகள்

**P. N. Kalyanasundaram,** *Headmaster, Board School, Kayapakkam.*

## 4. வீட்டு வேலை (Home-work)

பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் குழந்தைகள் தங்கள் பொழுதில் தினசரி 5 மணி நேரம்தான் பள்ளியில் செலவிடுகிறார்கள். பாக்கி நேரத்தில் பெரும்பகுதியை அவர்கள் வீட்டில் கழிப்பதால் ஆசிரியர்கள் அவர்களுக்கு வீட்டு வேலை கொடுத்தல் அவசியமாகிறது. ஆகலின் இக் கட்டுரையில் வீட்டு வேலையின் அவசியம், அதன் முறைகள், பயன் முதலியவைகளை விளக்குவோம்.

பள்ளிச்சிறார்க்கு வீட்டு வேலை கொடுப்பது, நெடுநாட்களாகவே கையாளப்பட்டு வருகிறது. பள்ளியில் கற்கும் கல்விக்குத் துணை செய்வதே வீட்டு வேலை தருவதன் நோக்கமாகும். எழுதுதல், காப்பி, சித்திரம், படம் வரைதல், பாடல்களையும், வாய்ப்பாடுகளையும் மனப்பாடம் செய்துவரச் செய்தல், கணிதம் இவைகளை வீட்டு வேலைகளாக ஆசிரியர்கள் கொடுக்கிறார்கள். இவற்றை இரவில் படிக்கவேண்டியவை; காலை நேரத்தில் பயில வேண்டியவை; என இருவகையிற் பிரிக்கலாம். இரவில் சிறுவர் அநேகமாகத் தங்கள் பாட புத்தகங்களையே படிக்கிறார்கள். ஆசிரியர் கொடுத்த விளக்கக் குறிப்புகள், அரும்பதவுரைகள் இவைகளைக் குறித்துக்கொண்டு போகிறார்கள். ஆனால் இரவில் படிக்கிறதில்லை. ஆகவே அவற்றையும் சிறுவர், சிறுமிகள் இரவில் படிக்குமாறு ஆசிரியர்கள் எச்சரிக்கை செய்து அனுப்பவேண்டும். பரீட்சை சமீபத்தில் மட்டும் மாணவர்கள் பழைய பாடங்களைப் படிப்பார்கள். தினசரி பழைய பாடங்களைப் படித்து வருமாறு செய்தல் வேண்டும். மனனம் செய்யவேண்டிய செய்யுள்களையும் குழந்தைகள். இரவில் விளக்கின் முன் படித்தல் வேண்டும். எழுதுதல், கணக்குச் செய்தல் இவைகளைக் காலை நேரத்தில்தான் சிறுவர்கள் செய்யவேண்டும். காப்பி அல்லது புஸ்தகத்தைப் பார்த்து எழுதுதல் இவற்றைக் கரும்பலகையிலோ, நோட்டிலோ எழுதுவதற்குச் சரியான நேரம் காலை நேரமே. குழந்தைகள் குறித்த நேரத்தில் குறிப்பிட்ட வேலைகளைச் செய்துவரப் பார்த்துக் கொள்வது ஆசிரியர்களும் பெற்றோர்களும் இருவரும் சேர்ந்து கவனிக்கக்கூடியது. இவ்விஷயத்தில் பொதுவாக வீட்டு வேலைகள் செய்வதில் பெற்றோர்களின் கவனமும் கண்ணோக்கமும் இல்லையேல் ஆசிரியர்களின் அருமுயற்சி வீணேயாகும்.

படம் வரைதல், எழுதுதல், கணக்குச் செய்தல் முதலியவற்றைச் சிறுவர்கள் இரவில் விளக்கின்முன் செய்வதைக் கண்டிக்கவேண்டும்.

தினசரி கடமைகள் நீங்கலாக விடுமுறை நாட்களில் தரும் வீட்டு வேலைகளாவன, தமிழ்ச் செய்யுட்களைப் பல தடவை எழுதிப் பார்க்கும்படி குழந்தைகளுக்குச் சொல்லி.யனுப்பலாம். ஒரு செய்யுளை அல்லது ஆங்கிலப் பாடலைப் பலதடவை பார்த்துப் படிப்பதைவிட ஒரு தடவை எழுதிப் பார்த்தால் சீக்கிரம் மனதில் பதியும். இஃது அனுபவம். அதோடு இன்னொரு தீமை என்னவெனில் செய்யுளை நன்ருக ஒப்புவிக்கும் சிறுவனை எழுதச் சொன்னுல் கீழ்கண்டவாறு பிழைகளுடன் விளங்கும்.

ஆண்டான்டு தோரும் அழுது
புரண்டாலும் மாண்டார் வறுவரோ
மானிலத்தீர் வேண்டா நமக்கும் அது
வழியே நாம் போமளவும் எமக்
கென்னென்றிட் டுண்டிறும்.

என்று நான்கு வரியுள்ள செய்யுளை ஐந்து வரிகளில் பிழையுடன் எழுது வான். ஆதலின் எழுதச் செய்தல் நல்லது. செய்யுளை எழுதும்போது ஒவ்வொரு வரியிலும் ஆரம்பமாகும் வார்த்தை ஒவ்வொரு வரியின் கடைசி வார்த்தை இவைகளைக் கவனித்துக் கியாபகம் வைத்துக் கொள்ளுமாறு சிறுவர்களுக்கும் நாம் எடுத்துரைக்கவேண்டும்.

பொதுவாக, எழுத்துப் பிழைகளும், சந்திப் பிழைகளும் நம் சிறுவர்களிடத்து இராது ஒழியவேண்டுமானுல் குறிப்பிட்ட செய்யுளையோ, வியாசத்தையோ அவர்கள் பலதடவை எழுதிப் பார்த்தல் வேண்டும். வகுப்பில் கொடுத்த 'சொல்வதெழுதுத' லில் (Dictation) காணும் பிழைகளையும் திருத்தி, ஒவ்வொரு சரியான வார்த்தையையும் பலதடவை எழுதும்படி சொல்லுகிறோம் அல்லவா! அவைகளை வீட்டு வேலைக்கு வைத்துக்கொள்ளச் செய்தால் பள்ளிக்கூடத்தில் அதனுல் மிஞ்சும் நேரத்தை உபயோகமாகக் கழிக்கலாம்.

கணித சம்பந்தமாய் வீட்டுவேலை.

விடுமுறை நாட்களில் வெயிலில் அலையாமல் இருக்கவேண்டு மென்ற நல்ல நோக்கத்துடன், சில நல்ல ஆசிரியர்கள் தம் வகுப்புக் குழந்தைகளுக்கு ஏராளமான கணக்குகளைச் செய்து வருமாறு சொல்லி அனுப்பிவிடுகிறுர்கள். ஏன்! சில சமயங்களில் கணக்குப் புத்தகத்தில் 25ம் பக்கம் முதல் 29ம் பக்கம் முடிய உள்ள 90 கணக்குகளையும் சனி, ஞாயிறுகளில் போட்டுக்கொண்டு வாருங்கள் என்றும் ஒரு ஆசிரியர் சொல்லி அனுப்பினுர். இப்படிச்செய்வது வீட்டில் உள்ள படித்த பெற்ருேர், மற்ருேர், பிரைவேட் உபாத்தியாயர்கள், இவர்

களுக்குக் கொடுக்காது கொடுத்த வீட்டு வேலையேயாகும். இத்தகைய வீட்டு வேலையினால் நன்மைக்குப் பதில் தீமையே விளைகிறது. எப்படி யெனில்; முதலாவது, நிறையக் கணக்குகளைச் செய்து தொலைக்க வேண்டுமே என்ற பீதி, இரண்டாவதாக (By hook or by Crook) எப்படியாவது தப்போ, தவறோ, காப்பியடித்தாவது போட்டுவிட வேண்டும் என்ற சுவையற்ற, பயனற்ற தீரமான உணர்ச்சி, மூன்றாவதாக யாரிடமாவது சென்று உதவிநாடல், அல்லது தெரிந்த ஒன்றிரண்டு பிள்ளைகள் செய்தவற்றை மற்றப் பிள்ளைகள் காப்பியடிக்க நேரிடுதல்— இவை மட்டுமின்றி கற்றறிந்த, விஷயம் தெரிந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கும் வீட்டு வேலைப்பயிற்சிகளிலிருந்து பள்ளிக்கூடத்தைப் பற்றித் தவறான அபிப்பிராயமும் கொள்ள ஏதுவாகும்.

ஆகவே வீட்டு வேலைப்பயிற்சிகளைத் தருமுன் ஆசிரியர் ஆயிரந் தடவை யோசித்துச் செய்தல் நன்று. பொதுவாக வீட்டு வேலைகளைச் சிறுவர்கள் பிறர் உதவியை நாடாமல் தாமாகவே உற்சாகத்துடன் செய்தல் வேண்டும். அதற்கேற்ப ஆசிரியர்கள் ஆராய்ந்து பயிற்சிகளைத் தயாரித்தல் வேண்டும். கணிதம் சம்பந்தப்பட்டவரையில் ஒரு உதாரண (Problem) த்தைக் கற்பித்துக் குழந்தைகள் யாவரும் நன்கு அறிந்துகொண்ட பின்னரே—அதுபோன்ற பயிற்சிகளை வீட்டு வேலைகளாகக் கொடுக்கலாம்.

தமிழ்ப்பாட சம்பந்தமாய், கேள்விகள் கொடுத்து விடைகளை எழுதிவரச் செய்தல், முடியாத வாக்கியங்களைக்கொடுத்து முடித்துவரச் செய்தல், கோடிட்ட இடங்களைச் சரியான வார்த்தைகளால் பூர்த்தி செய்தல், குறிப்பிட்ட பதங்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுதல் போன்ற அப்பியாசங்களைக் கொடுக்கலாம். வார்த்தை அகராதிகள் எழுதிவரச் செய்யலாம்.

படம் வரைதலை விடுமுறை நாட்களில் மட்டும் கொடுத்தல் வேண்டும். அப்போதுதான் அவசரமின்றி அழகாக வரைந்துவருவார்கள். பள்ளிக்கூட நாட்களில் படம் வரைந்து வரச்செய்தல் நன்மை பயக்காது.

வார இறுதி விடுமுறை நாட்களிலும், கோடை விடுமுறை போன்ற நீண்ட ஓய்வு நாட்களிலும் சிறுவர்களுக்குக் கைவேலை சம்பந்தமாய் வீட்டு வேலைகள் கொடுக்கலாம். ஆனால் இதில் கட்டாயப் படுத்துதல் நல்லதல்ல. பெரிய வகுப்புகளில், ஊக்கமும் ஆசையுமுள்ள சில பிள்ளைகளிடம் வீட்டிற் செய்து வருமாறு சிறு கைவேலைகளைக் கொடுக்கலாம். II-வது III-வது வகுப்புக் குழந்தைகளை—களிமண்ணால் யானை, காகம், பூசனிக்காய் முதலிய உருவங்களை விடுமுறை நாட்களில் செய்து கொண்டுவரச் செய்து—நன்றாக இருப்பவைகளைப் பிள்ளைகளின்

பொருட்காக்ஷி மேஜைமீது வைக்கலாம். அவர்களுக்கு இன்னதைச் செய்யுங்கள் என்று ஒரு குறிப்பு (Idea) கொடுக்கவேண்டும். அல்லாது களிமண்ணால் ஏதாவது செய்துவாருங்கள் என்று சொல்லி அனுப்பினால் —எல்லாக் குழந்தைகளும் அசந்தர்ப்பமாக—ஒவ்வொரு களிமண் உண்டை செய்து கொண்டுவந்து 'பந்து' என்பார்கள்.

இப்படியாக ஒவ்வொரு பாடத்திற்கும் தகுந்த வீட்டு வேலைகளுக்குப் பிறகு ஆசிரியர் செய்யவேண்டிய அரும்பணி யொன்றுளது. அதுதான் 'சரிபார்த்தல்' அல்லது கண்காணித்தல். அதாவது கொடுத்த வேலைகளைப் பிள்ளைகள் சரிவரச் செய்துவந்தார்களா? அரை குறையாகச் செய்தார்களா? எத்தனைபேர் செய்யாதவர்கள்? அவர்கள் செய்யாததற்குக் காரணம் என்ன? என்று கவனித்தல். அவகாச மின்மையாலோ, அசிரத்தையாலோ உபாத்தியாயர், பிள்ளைகள் செய்து வந்த வீட்டு வேலைகளைப் பாராமல் இருந்துவிட்டால்—மறுதடவை அவர் கொடுக்கும் வீட்டு வேலைகளால் பயன் ஏதுமில்லாதொழியும்.

ஆகவே வீட்டு வேலைப்பயிற்சிகள் தருமுன், மறுபடியும் அவற்றைத் தணிக்கைசெய்ய அவகாசம், பயிற்சியின்பயன், விடுமுறை நாட்களின் கால அளவு, குழந்தைகளின் சக்தி இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான்—சிறுவர்களுக்கு வீட்டு வேலை தரவேண்டும்.


குழந்தைகள் செய்துவந்த வீட்டு வேலைகளைக் கவனிக்க அவகாசம் இல்லையெனில் அந்த ஆசிரியர் தம் வகுப்புக் குழந்தைகளுக்கு வீட்டு வேலைகள் கொடுப்பதைக் காட்டிலும் கொடுக்காதிருப்பதே உத்தமமாகும்.

ஆசிரியர்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கும் வீட்டு வேலைகள், பள்ளிக்கூடத்தின் திறமையைப் பிறர், அறிந்துகொள்ளச் செய்யும் அளவுகோலாகும். பிள்ளைகளின் கல்விக்குத் துணைக்கருவியாகும். பள்ளியின் நேரத்தை லாபகரமாக உபயோகிக்க வழிகாட்டியாகும்.

# கலையும் கைத்தொழிலும். XIII

(**R. M. Savour,** *Divisional Inspector of Schools, Coimbatore*).

தோல் பைகளுக்கு கைப்பிடியைப் பொருத்தும் விதம் எப்படி என்பதை கீழே காட்டியுள்ள படங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். ஒன்று, வாரினால் தைக்கப்பட்ட பிடியானது பையின் பக்கத்திலுள்ள துவாரத்தில் சாய்வாகச் சொருகப்பட்டு அதன் நுனி இரண்டு குருக்கு வார் தையலால் பொருத்தப்பட்டிருக்கிறது. மற்றொன்று அதே மாதிரி



தான். ஆனால் பிடி நேராகச் சொருகப்பட்டு நுனி இரண்டு குறுக்குத் தையலாலும் ஒரு நெடுக்குத் தையலாலும் பொருத்தப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு படங்களிலும் D, உருவமானதோ அல்லது நீண்ட சதுரமானவோ வளையத்தை பையின் மேல்புறத்தில் தைக்கப்பட்டுள்ள ஒரு சிறிய தோல் பட்டையில் பொருத்தி அதில் பிடி மாட்டப்பட்டிருக்கிறது.

# செய்தித் திரட்டு.

---

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்.

பாஷா அபிவிருத்தினி சங்கம், குருஜயர் மந்தை, இந்தியர் செஞ்சிலுவை, திருப்புகழ் கழகம், ஸ்தோத்திரப்பாட வகுப்பு, இவை களின் ஆரம்பவிழா.

மேற்படி சங்கங்களின் ஏழாவது ஆண்டுவிழா 25—7—42-ல் சென்னை நுங்கம்பாக்கம் ஸ்திரீகள் சங்கத்தலைவி ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் தலைமையில் நடந்தது. அப்பொழுது பள்ளிக்கூடச் சிறுமிகளால் கும்மி கோலாட்டம், அபிநயம், டான்ஸ், திருப்புகழ் பாடல்கள், தேசீய கீதம் முதலியன வெகு விமரிசையாய் நடைபெற்றன. தலைவி முடிவுரையில் பள்ளிக்கூடத்தின் வேலைகளைக் கண்டு தாம் மிகவும் சந்தோஷப் படுவதாயும், இன்னும் பலவிதங்களில் அபிவிருத்தியடைய கடவுளைப் பிரார்த்திப்பதாயும் கூறினர்.

---

## மதுராந்தகம் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், காயப்பாக்கம்.

18—7—42-ல் இச்சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் அச்சரபாக்கத்தில் நடைபெற்றது. அப்பொழுது வரப்போகும் வருஷாந்திரக் கொண்டாட்ட விஷயமாக ஆலோசனைகள் செய்யப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## வாலாஜாபாத் ஆரம்ப ஆசிரியர் கழகம்.

25—7—42-ல் இச்சங்கத்தின் ஆண்டுவிழா காஞ்சிவட்டம் பாடசாலைப் பரிசோதகர் உயர்திரு T. S. கல்யாண சுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

அப்பொழுது D. S. S. N. பாடசாலைச் சிறுமிகளால் கும்மியும், இந்துமத பாடசாலைச் சிறுவர்களால் கோலாட்டமும் நடைபெற்றன. பிறகு செங்கற்பட்டு போதனாமுறைப் பாடசாலை தலைமையாசிரியர் திரு. A. V. தியாகராஜய்யர் அவர்கள் "வருங்கால ஆசிரியன்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு செய்தார்.

---

## கோடைக்கானல் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், தாண்டிக்குடி.

27—6—42-ல் இச்சங்கம், மதுரை ஜில்லாபோர்டு மெம்பர் ஸ்ரீ K. P. காமாக்ஷி செட்டியார் அவர்கள் தலைமையில் கூடிற்று.

தீர்மானங்கள்—(1) யுத்த நெருக்கடியை முன்னிட்டு மலை வாசிகள் அதிகரித்து இருப்பதாலும், கீழ்நாட்டைவிட மலைமேல் வசிப்பவர்களுக்குச் செலவு அதிகமிருப்பதாலும், கோடைக்கானல் முனிசிபாலிட்டி கொடுத்துவரும் மலைப்படி ரூ. 9 போலவே ஜில்லா போர்டாரும் கொடுக்கும்படியும்,

(2) போர்டு பாடசாலைகளில் ஆங்கிலத்திற்குள்ள சிலபஸ் குறைவினால் ஹைஸ்கூலில் படிக்க விரும்புவோர் போர்டு ஆசிரியர்களை பிரைவேட் டியூஷன் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்கும்படி கேட்கிறார்கள். அவர்கள் உத்தரவில்லாமல் கற்றுக்கொடுக்க மறுக்கிறார்கள். இதனால் பள்ளிக்கூட ஆஜரை விருத்திசெய்ய முடியவில்லை. ஆகையால் ஆங்கிலம் டியூஷன் கற்றுக்கொடுக்க போர்டு ஆசிரியர்களுக்கு அனுமதியளிக்கும்படியும், இச்சங்கம் ஜில்லா போர்டார் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

---

## திண்டுக்கல் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், திண்டுக்கல்.

26—7—42-ல் இச்சங்கத்தின் மூன்றாவது ஆண்டுவிழா நடைபெற்றது.

காலையில் திண்டுக்கல் சப் ரிஜிஸ்தரார் ஸ்ரீ ஞானய்யா அவர்கள் தலைமையில் திறப்பு விழாவும், ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சரவணசுவாமி நாடார் அவர்களால் "தற்கால ஆரம்பக் கல்வியின் நோக்கமும் அதன் நிறைவேறுதலும்" என்பதுபற்றி உபந்யாசமும் நடந்தன.

மாலையில் மகாநாட்டுக்கு ஜில்லாபோர்டு உபதலைவர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி அவர்கள் தலைமை வகித்தார். அப்பொழுது போதனாமுறைப் பாடசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீ. P. S. ரகுபதி அய்யர் அவர்களால் "நல்லாசிரியன்" என்பதுபற்றி சொற்பொழிவு நடந்தது.

---

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, கருங்கலக்குடி. (மதுரை)

இப்பாடசாலையைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கத்தில் 5 பெண்கள் உள்பட 64 மெம்பர்கள் இருக்கிறார்கள். இவர்களை 8 தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் இந்தியாவின் பெரிய தலைவர்களின் பெயரிடப்பட்டிருக்கிறது. அவர்கள் தினசரி செய்யும் தொண்டாவன:—கிராமத்தையும் பள்ளிக்கூடத்தையும் சுகாதாரப்பாடல்களுடன் சுத்தம் செய்தல், சிறு பையன்களுக்கு எண்ணெயிட்டுத்தலைவாரி விடுதல், அவர்களுக்கு சோப்பு வழங்கி துணிகளை சுத்தம் செய்து கொடுத்தல் முதலியன. சமீபத்தில், கெட்டுப்போயிருந்த நல்லா குளத்து ஜலத்தைச் சுத்தம் செய்து குடி நீராக்கிவைத்தது பாராட்டத் தக்கது.

## அரு. நடேசன் செட்டியார் உயர்தர ஆரம்ப பாடசாலை, சிவகங்கை.

17-7-42-ல் இப்பாடசாலை மாணவர் கல்வி அபிவிருத்தி சங்கத்தின் வருஷமுதல் கூட்டம் வழக்கறிஞர் ஸ்ரீ. V. சுந்தரமய்யர் அவர்கள் தலைமையில் கூடிற்று. அச்சமயம் வக்கீல் ஸ்ரீ. G. நாகசாமி அய்யர் அவர்கள் இச்சங்கத்தின் நோக்கத்தைப்பற்றி விரிவாகப் பேசினார்.

26—7—42-ல் இப்பாடசாலையின் ரெட்கிராஸ் மெம்பர்கள், சாரணர், குருளையர் எல்லாருமாக 4 மைலுக்கு அப்பாலுள்ள சுந்தர நடப்பு, துவங்கா. என்ற கிராமங்களுக்குச் சென்று சுகாதார விதிகளைப் போதித்து, யுத்தமும் நமது கடமையும் என்பதுபற்றி பிரசங்கமும் செய்துவந்தார்கள்.

30—7—42 ல் பெற்றோர் தினக்கூட்டம் நடைபெற்றது. சங்கத் தலைவர் ஸ்ரீ. A. நாராயணஞ் செட்டியார் தலைமை வகித்தார். அப்பொழுது 1 முதல் 8 வகுப்புவரையுள்ள மாணவர்களால் அபிநயப் பாட்டுகள், சம்பாஷணைகள், முதலியன நடைபெற்றன. வந்தனோபசாரம், சந்தண தாம்பூலத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

## சேலம் சிட்டி முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் யூனியன்.

26—7—42-ல் இச்சங்கத்தின் மகாசபை கூடிற்று. ஸ்ரீ. டேவிட் தலைமை வகித்தார். புதிய நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிறகு, விலைவாசிகளின் உயர்வை உத்தேசித்து, முனிசிபல் சிப்பந்திகளுக்காக உணவுப்பொருள் ஸ்டோர் ஒன்று ஏற்படுத்தி சப்ளைசெய்யும்படி முனிசிபல் கமிஷனர் அவர்களைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

1—8—42-ல் சேலம் முனிசிபாலிடியாரால் தற்பொழுது கொடுத்துவரும் யுத்தப்படி ரூபாய் ஒன்றை நிறுத்தி அதனால் கிடைக்கும் மிச்சத்தொகையைக்கொண்டு 5 உபாத்தியாயர்களை நியமிக்கலாம் என்று முனிசிபல் கௌன்சிலில் கொண்டுவரலான தீர்மானத்தை ஆலோசித்து எந்தவிதத்திலும் யுத்த அலவன்சை நிறுத்தக்கூடாதெனத் தீர்மானித்து தூதுகோஷ்டி ஒன்று செல்லுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் பயனாக கௌன்சில் மீட்டிங்கில் ஆசிரியர்களுக்குச் சாதகமாக கௌன்சிலர்கள் தீர்மானித்தார்கள்.

---

## திருச்செந்தூர் தாலூகா எய்டெட் எலிமெண்டரி ஸ்கூல் டீச்சர்ஸ் யூனியன், குலசேகரபட்டணம்.

18—7—42-ல் இச்சங்கத்தின் காலாண்டுக் கூட்டம் Rev. Fr. T. வில்லவராயர் அவர்கள் தலைமையில் கூடிற்று. பல பகுதிகளிலிருந்து சுமார் 70 ஆசிரியர்கள் ஆஜராயினர். இவ்வாண்டிற்கு நிர்வாகஸ்தர்கள்

தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிறகு 16 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

யூனியனுக்கு அதிக உறுப்பினர்களைச் சேர்க்கவும் வருவாயைக் கூட்டவும், சப் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. வந்திருந்த யாவர்க்கும் தலைவர் அவர்கள் முயற்சியால் அறுசுவை உண்டி அளிக்கப்பட்டது.

---

### எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்கள் சங்கம், தூத்துக்குடி.

23—7—42-ல் இச்சங்கத்தின் விசேஷக்கூட்டம் ஒன்று ஸ்ரீவைகுண்டம் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ மகாலிங்கய்யர் அவர்கள் தலைமையில் கூடிற்று. ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர், புதுக்கோட்டை ஆசிரிய சங்கத்தார், உள்ளூர் பெண் பாடசாலை உபாத்தியாயினிகளும் விஜயம் செய்தனர், சுமார் 450 ஆசிரியர்கள் ஆஜராயிருந்தனர்.

தலைவர் அவர்கள் 'தேசீய யுத்த முன்னணி' என்ற விஷயம் பற்றிப் பேசினார்கள். அவரைப் பின்பற்றி ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டரும் பேசினர்.

அதற்குப் பின் ஜில்லா யுத்தப் பிரசாரகர் கான்சாகிப் ஸ்ரீபிஜிலி சாகிப் அவர்கள், தற்கால யுத்த நிலைமையையும், ஜனங்கள் பொய்வதந்திகளால் கஷ்டப்படுவதையும், அதைத் தவிர்க்க ஆசிரியர்கள் செய்ய வேண்டியதையும் எடுத்துக்கூறினர்.

தலைவர் பின்னுரையில் ஆசிரியர்கள் யுத்த சம்பந்தமாகச் செய்ய வேண்டிய தொண்டுகளை எடுத்துக்கூறி "தேசீய யுத்தப் பிரமாணத்தைப்" படித்தார்கள். யாவரும் எழுந்து நின்று பிரமாணத்தை எடுத்துக்கொண்டனர். வந்தனோபசாரத்திற்குப் பின் கூட்டம் கலைந்தது.

---

### நாங்குனேரி தாலூக்கா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், நாங்குனேரி.

27—7—42-ல் இச்சங்கத்தின் சப்கமிட்டிக் கூட்டம், ஸ்ரீ K. A. வள்ளிநாயகம் செட்டியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது, யுத்த காலத்தை முன்னிட்டு மற்றவர்களைப்போல் தங்களுக்கும் மூன்று மாதச்சம்பளத்தை அட்வான்சாகக் கொடுக்கும்படியும், S. S. L. C. ஹையர் கிரேட் ஆசிரியர்களை செக்கண்டரிகிரேட் பரீக்ஷைக்கு அனுமதிக்கும்படிக்கும், 1—7—42-ல் கொடுக்கவேண்டிய இங்கிரிமெண்டைக் கொடுக்கும்படிக்கும், ஜில்லாபோர்டு ஸ்கூல்களுக்கு Table copy சப்ளை செய்யும்படியும், ஷெட்யூல் வகுப்பு மாணவர்களுக்கு அவர்களுக்கே உரித்தானதாக இனமாக புஸ்தகம், சிலேட்டு வழங்கவேண்டுமென்றும் ஜில்லாபோர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது. ஜில்லா போர்டு ஆசிரியர்கள் மகாநாட்டை செப்டம்பர் கடைசியில் கூட்டத்தீர்மானித்தது.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஸ்ரீவைகுண்டம்.

1-8-42ல் இச்சங்கத்தின் பொதுக் கூட்டம், சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ மகாலிங்கம் அய்யர் அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது தலைவர் 1 முதல் 5 வகுப்பு வரைக்குமுள்ள சரித்திர சிலபஸை விளக்கிக் காட்டினர்.

## முசிரி தாலூகா ஆரம்ப ஆசிரியர் ஆசிரியைகளின் யூனியன், முசிரி.

9-8-42ல் இந்த யூனியன் புதிதாக நிறுவப்பட்டது. முசிரி ரேஞ்சு சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பழனிச்சாமி பிள்ளை தலைமை வகித்து இச்சங்கத்தின் நோக்கத்தையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கிக் காட்டினார். பின்பு யூனியனுக்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு முசிரி தாலூகா ஆசிரியர்களின் சார்பில் ஒரு வரவேற்புப் பத்திரம் தலைவருக்கு வாசித்துக் கொடுக்கப்பட்டது. உபகாரியதரிசி அனைவருக்கும் குளிர் பானம் கொடுத்து சந்தோஷப் படுத்தினார்.

---

## வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, ஆட்சி மன்றம் திறப்பு விழா

9-8-42ல் இப்பாடசாலை மாணவர் இல்லத்திற்கு ஆட்சி மன்றத் திறப்பு விழா நடைபெற்றது. கோயமுத்தூர் ரங்கவிலாஸ் மில் உரிமையாளர் திரு. கங்கா நாயுடு அவர்கள் தலைமை வகித்தார். காஞ்சீபுரம் டாக்டர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஆட்சி மன்றத்தைத் திறந்துவைத்து அதன் அமைப்பையும் சிறப்பையும் பாராட்டிப் பேசினார். 'ஆட்சி மன்றம்' என்பதுபற்றி கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ ஜகன்னாத அய்யர் பேசினார். தலைவர் முடிவுரையில் ஆட்சி மன்றத்தினர் வேண்டுகோளுக்கிணங்கி தாம் ஆயிரம் ரூபாய் நன்கொடை அளிப்பதாயும் இன்னும் தம்மாலான உதவியைச் செய்யத் தயாராயிருப்பதாயும் கூறினார்.


## திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்
(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. 0—8—0. (தபால் செலவு பிரத்தியேகம்)

: வேண்டுபவர்கள் :

**ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்**

ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :

# மதிப்புரை

## கதைக் கோவை இரண்டாம் தொகுதி

எஸ். வீ. வீ. அவர்களின் முன்னுரையுடன், அலையன்ஸ் கம்பெனி பிரசுரம். க்ளேஸ் காகிதம் ரூ. 4-0-0. பெதர் வெயிட் காகிதம் ரூ. 5-0-0.

அலையன்ஸ் கம்பெனியார் பிரசுரித்த முதல் தொகுதி கதைக் கோவையை நேயர்கள் அனைவரும் படித்திருப்பார்கள். அதில் 40 கதைகள் அடங்கியுள்ளன. இவ்விரண்டாம் தொகுதியில் 50 கதைகள் உள்ளன. இக்கதைகள் நம் நாட்டு வாழ்க்கையை எவ்வளவு சுவையுடன் விவரிக்க முடியுமோ அவ்வாறு விவரிக்கின்றன. நமது வாழ்க்கையில் இருக்கும் சிறு சிறு குற்றங்குறைகளை எடுத்துக் காட்டுகின்றன. அப்படிச் செய்வது சமூக வளர்ச்சிக்கு ஏதுவாயிருக்கும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். மிகவும் எளிய நடையிலும், உணர்ச்சி ததும்பும் மொழிகளிலும் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. தமிழ் நாட்டினரின் சாதாரண வாழ்க்கையிலும் தினசரி பேச்சுகளிலும் எவ்வளவு நளினச் சுவை கொண்டது என்பதை இக்கதைகள் நன்கு காண்பிக்கின்றன. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தைப் படித்து இன்புறுவார்கள் என்று நம்புகிறோம்.

## தமிழ் நாட்டுச் சிறு கதைகள்

7-ம் தொகுதி—T. N. சுப்பிரமணியம் 8-ம் தொகுதி—P. M. கண்ணன் 9-ம் தொகுதி—V. S. ராமகிருஷ்ணம் B.A., பிரசுரகர்த்தர்கள். அலையன்ஸ் கம்பெனி, மைலாப்பூர். விலை ஒவ்வொரு தொகுதியும் ரூ. 1—2—0.

அலையன்ஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப்படும் கதைத் தொகுதிகளில், இம்மூன்று புஸ்தகங்களும் சேர்ந்தன. இவைகளிலுள்ள கதைகள் எல்லாம் தமிழ் பத்திரிகைகளில் முன்பு பிரசுரிக்கப்பட்டிருந்தன. இவைகளில் மிகச் சிறந்ததானவைகளை ஒன்றாகத் திரட்டி ஒரு புஸ்தகத்தில் பிரசுரித்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. நல்ல பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. கதைகளின் நடையோ மிகவும் சுலபமானது, உணர்ச்சி ததும்பியுள்ளது. நமது பாலர்கள் இக்கதைகளை மிக ஆவலுடன் படிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

# பத்திராதிபர் குறிப்புகள்

**சென்னை ஆரம்பப் பள்ளிக்கூட நிலைமை.**

சென்னையிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை இன்னும் மிகக் குறைவாகவே யிருக்கின்றது. கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் இப்பொழுது சுமார் 15000 பாலர்களே இருப்பதாகத் தெரியவருகிறது. சென்ற வருஷத்தில் சுமார் 40,000 மாணவர்கள் இருந்துவந்தார்கள். உதவிபெறும் பள்ளிக்கூடங்களில் நிலைமை இன்னும் மோசமாகவே யிருக்கின்றது. சில பள்ளிக்கூடங்களில் 10 மாணவர்கள் கூட இல்லை யென்றும் தெரிய வருகிறது. பொது ஜனங்கள் பெரும்பாலும் சென்னைக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். பள்ளி மாணவர்கள், கிராமங்களிலேயே தங்கியிருக்கலாம். அப்படி யிருந்தால், வெளியூர்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும். அப்படி அதிகரித்ததாகத் தெரியவில்லை. எனவே, இம்மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருக்கவேண்டும். அல்லது, இம்மாணவர்கள் சென்னைக்கு தங்கள் பெற்றோர்களுடன் வந்து, பள்ளிக்கூடம் போகாமல் வீட்டிலேயே இருக்கவேண்டும்.

கல்வியின் அவசியம் எல்லோருக்கும் தெரிந்ததே. இந்நெருக்கடியான காலத்தில் பாலர்களுக்கு கல்வியில் ஏதாகிலும் தடையுண்டானால், அவர்கள் வாழ்நாள் வீணாகும். அத்தடங்கல் ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை துரைத்தனத்தார் செய்யவேண்டும். பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமங்கள் பல இருக்கின்றன. இங்கு பல ஜனங்கள் இப்பொழுது சென்றிருக்கக்கூடும். இக்கிராமங்களில் புதுப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டும். கட்டாயக் கல்வி திட்டத்தை எங்கும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.

ஆனால் நமது துரைத்தனத்தாரின் போக்கு வேறுவிதமா யிருக்கின்றது. கட்டாயக் கல்வி அமுலிலுள்ள இடங்களில் கூட, பாலர்கள் பள்ளிக்கு வாராமல் வீட்டில் தங்குவதை அங்கீகரிப்பதாக கட்டாயக் கல்வி திட்ட சட்டத்தை திருத்தியுள்ளார்கள். இதற்குக் காரணம் என்னவென்பது தெரியவில்லை. கட்டாயக் கல்வியில் அவர்களுக்குள்ள ஊக்கம் குறைந்துள்ளதென்றே சொல்லவேண்டும்.

சென்னை கார்ப்பொரேஷன் அதிகாரிகள் தங்கள் ஆசிரியர்களுக்கு இது சம்பந்தமாக ஒரு உத்திரவு விடுத்திருப்பதாகக் கேள்விப்

படுகிறோம். இவ்வுத்திரவின்படி, இன்னும் ஒருமாத காலத்தில், கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பாலர்களின் எண்ணிக்கையை சென்ற வருஷ அளவுக்கு அதிகப் படுத்தவேண்டுமென்றும், அப்படி செய்யாவிடில், அங்குள்ள ஆசிரியர்களின் சம்பளம் குறைக்கப்படும் என்றும் அதில் கண்டுள்ளதாம். ஆசிரியர்கள் பாலர்கள் பள்ளிக்கூடத்துக்கு வரும்படி முயற்சி எடுத்துக் கொள்வது அவசியம். ஆனல் இம்மாதிரி அவர்களை மிரட்டுவது சரியான வழியாகாது என்றே நம்புகிறோம். இது விஷயத்தில் கார்ப்பொரேஷன் கௌன்சிலர்களும், கார்ப்பொரேஷன் கல்வி அதிகாரியும், அவருடைய உதவியாளர்களாகிய சூபர் வைசர்களுமே முக்கியமாக முயற்சி செய்ய வேண்டியவர்கள். ஒவ்வொரு டிவிஷனிலுமுள்ள பொது ஜனங்களிடம் சென்று சென்னைக்கு அபாயம் இல்லை என்பதையும் பள்ளிக்கூடங்களுக்கு பாலர்கள் செல்ல வேண்டியதின் அவசியத்தையும் எடுத்துக் காட்டி, பாலர்களை பள்ளிக்கூடத்துக்கு அனுப்புமாறு வற்புறுத்த வேண்டும். பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் இல்லையென்றால் போர் நிலையினல் ஏற்படும் பீதியே அதற்குக் காரணம். அதை நீக்குவதற்கு ஆசிரியர்களின் பேச்சு போதாது. தவிர ஆசிரியர்களுக்கு அதற்கு வேண்டிய அவகாசமும் இல்லை. இவ்வேலை டிவிஷன் கௌன்சிலர்களுடையவும் பள்ளிக்கூட மேற்பார்வையிடும் அதிகாரிகளுடையவும் பொறுப்பேயாம்.

**உயர்தர ஆரம்பக் கல்வி பரிக்ஷை**

பள்ளிக்கூடங்கள் எல்லாம் திறந்து 2 மாதங்களுக்கு மேலாயின. இன்னும் 1943-ம் வருஷ பரிக்ஷைக்கு என்று துரைத்தனத்தாரால் வெளியிட வேண்டிய பாட புத்தகம் தயாராயில்லை என்பது மிக விசனிக்கத் தக்கது. சென்ற ஆண்டிலேயே இப்புத்தகங்கள் ஜூலை மாதத்தில் தான் வெளி வந்தன. இவ் வருஷத்திலாவது பள்ளிக்கூடங்கள் திறக்கும் சமயத்தில் அதாவது ஜூன் மாதத்திலேயே பிரசுரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆகஸ்டு 15 தேதியாகியும் இன்னும் புஸ்தகங்கள் வரவில்லை. இது யாருடைய தவறு? இவ்விஷயத்தை நமது டைரெக்டர் தீர விசாரிப்பார் என்று நம்புகிறோம். 2 மாத காலமாக 8-வது வகுப்பில் தாய்ப் பாஷை பாடம் நடக்காமல் இருப்பதினல் வீண் நஷ்டம் உண்டாயிருக்கிறது? இதன் பொறுப்பு யாருடையது? இம்மாதிரி புத்தகம் பிரசுரிப்பதில் காலதாமதம் செய்துவிட்டு கடைசியில் பிள்ளைகள் சரிவர பரிக்ஷையில் தேறவில்லை என்று ஆசிரியர்கள் சீறுவது தப்பல்லவா?

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

## சுவாமி விவேகாநந்தர்

## ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம் | | விலை | 0—12—0 |
| ,, ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பொடி
ரிஜிஸ்டர் நெ. 1506

## அசோகா சுகந்த பாக்கு தூள்

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி,
அசோகா பாக்டரி,
கோயமுத்தூர்.

Regd. No. M. 3473

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

## செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள் :

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள் :

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... ... | 2,500 |

## அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினல், கிடைக்கக்கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., "for The South India Teachers' Union," 520, High Road, Triplicane, Madras.